இந்திய அரசு
சட்டம் மற்றும் நீதி அமைச்சகம்

# அரசமைப்பு (நூறாம் திருத்தச்) சட்டம்,2015

# THE CONSTITUTION (ONE HUNDREDTH AMENDMENT) ACT, 2015

தமிழாக்கம்:
இந்திய அரசுக்காக
சட்ட (ஆட்சி மொழிப் பிரிவு)த் துறை
தலைமைச்செயலகம்
சென்னை– 600 009

தமிழ்நாடு அரசு எழுதுபொருள் அச்சுத்துறை சிறப்பு ஆணையர்
மற்றும் ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது
2018

# அரசமைப்பு (நூறாம் திருத்தச்) சட்டம்,2015

**[2015,மே 28]**

இந்தியா மற்றும் வங்காளதேச அரசாங்கங்களுக்கிடையே செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையையும் அதன் மரபுச்சீர்முறையையும் பின்பற்றி இந்தியாவினால் ஆட்சிநிலவரைகளை அடையப்பெறுவதற்கும் குறித்தசில ஆட்சிநிலவரைகளை வங்காளதேசத்திற்கு மாற்றுவதற்கும் செல்திறப்படுத்துவதற்கு இந்திய அரசமைப்பினை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டம்.

இந்தியக் குடியரசின் அறுபத்தாறாம் ஆண்டில் நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

1. இந்தச்சட்டம், அரசமைப்பு (நூறாம் திருத்தச்) சட்டம், 2015 என்று வழங்கப்பெறும். குறுந்தலைப்பு.

2. இந்தச் சட்டத்தில்,- பொருள் – வரையறைகள்.

(அ) "அடையப்பெற்ற ஆட்சிநிலவரை" என்பது, இந்தியா – வங்காளதேச உடன்படிக்கையிலும் அதன் மரபுச்சீர்முறையிலும் உள்ளடக்கப்பட்டுள்ளவையும் (இ) கூறில் சுட்டப்பட்டுள்ள உடன்படிக்கையையும் அதன் மரபுச்சீர்முறையையும் பின்பற்றி வங்காளதேசத்திலிருந்து இந்தியாவினால் அடையப்பெறும் நோக்கத்திற்காக எல்லை

வரையறுக்கப்பட்டவையென, முதலாம் இணைப்புப்பட்டியலில் சுட்டப்பட்டுள்ளவையுமான அவ்வளவு ஆட்சிநிலவரைகள் என்று பொருள்படும்;

(ஆ) “குறித்திட்ட நாள்” என்பது, இந்தியா-வங்காளதேசம் உடன்படிக்கையையும் அதன் மரபுச்சீர்முறையையும் பின்பற்றி, முதலாம் இணைப்புப்பட்டியலிலும் இரண்டாம் இணைப்புப்பட்டியலிலும் சுட்டப்பட்டுள்ளவாறான மற்றும் அந்த நோக்கத்திற்காக எல்லை வரையறுக்கப்பட்ட ஆட்சிநிலவரைகளை அவ்வாறாக அடையப்பெறவும் மாற்றப்பெறவும் செய்வித்த பின்பு, வங்காளதேசத்திலிருந்து ஆட்சிநிலவரைகளை அடையப்பெறுவதற்காகவும் வங்காளதேசத்திற்கு ஆட்சிநிலவரைகளை மாற்றுவதற்காகவுமான தேதி என மைய அரசாங்கம் அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாகக் குறித்திடலாகும் அத்தகைய தேதி என்று பொருள்படும்;

(இ) “இந்தியா- வங்காளதேச உடன்படிக்கை” என்பது, இந்தியாவுக்கும் வங்காளதேசத்துக்கும் இடையே நில எல்லைக்கோட்டை வரையறைசெய்வது தொடர்பாக, இந்தியக் குடியரசு அரசாங்கத்திற்கும் வங்காளதேச மக்கள் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையேயான 1974, மே 16 ஆம்

நாள் தேதியிடப்பட்ட உடன்படிக்கையும் தொடர்புடைய பொருட்பாடுகளும், 1974, டிசம்பர் 26 ஆம் நாள், 1974, டிசம்பர் 30 ஆம் நாள், 1982, அக்டோபர் 7 ஆம் நாள், 1992, மார்ச் 26 ஆம் நாள் தேதியிடப்பட்ட பரிமாற்ற உரிமையாவணங்களும் மற்றும் இந்தியா மற்றும் வங்காளதேச அரசாங்கங்களுக்கிடையே செய்து கொள்ளப்பட்ட,2011, செப்டம்பர் 6 ஆம் நாள் தேதியிடப்பட்ட மேற்சொன்ன உடன்படிக்கைகான மரபுச்சீர்முறையும் என்று பொருள்படும், அவற்றின் தொடர்புடைய சாரக் குறிப்புகள் மூன்றாம் இணைப்புப்பட்டியலில் விவரிக்கப்பட்டுள்ளன;

(ஈ) "மாற்றப்பட்ட ஆட்சிநிலவரை" என்பது, இந்தியா—வங்காளதேச உடன்படிக்கையிலும் அதன் மரபுச்சீர்முறையிலும் உள்ளடக்கப்பட்டுள்ளவையும் (இ) கூறில் சுட்டப்பட்டுள்ள உடன்படிக்கைகளையும் அதன் மரபுச்சீர்முறையையும் பின்பற்றி இந்தியாவினால் வங்காளதேசத்திற்கு மாற்றும் நோக்கத்திற்காக எல்லை வரையறுக்கப்பட்டவையென இரண்டாம் இணைப்புப்பட்டியலில் சுட்டப்பட்டுள்ளவையுமான அவ்வளவு ஆட்சிநிலவரைகள் என்று பொருள்படும்;

3. குறித்திட்ட நாளிலிருந்து, அரசமைப்பிற்கான முதலாம் இணைப்புப்பட்டியலில்,-

அரசமைப்பின் முதலாம் இணைப்புப்-பட்டியலுக்கான திருத்தம்.

(அ) அசாம் மாநிலத்தின் ஆட்சிநிலவரைகள் தொடர்பான பத்தியில், " மற்றும் 2015 ஆம் ஆண்டு அரசமைப்பு (நூறாம் திருத்தச்) சட்டத்தின் இரண்டாம் இணைப்புப்பட்டியலின் I ஆம் பகுதியில் சுட்டப்பட்டுள்ள ஆட்சிநிலவரைகளுக்கு அது தொடர்புடையதாகிற அளவிற்கு, 1960 ஆம் ஆண்டு அரசமைப்பு (ஒன்பதாம் திருத்தச்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (அ) கூறில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், 2015 ஆம் ஆண்டு அரசமைப்பு ( நூறாம் திருத்தச்) சட்டத்தின் இரண்டாம் இணைப்புப்பட்டியலின் I ஆம் பகுதியில் சுட்டப்பட்டுள்ள ஆட்சிநிலவரைகள்" என்ற சொற்களும், அடைப்புக்-குறிகளும், எண்களும் இறுதியில் சேர்க்கப்படுதல் வேண்டும்.

(ஆ) மேற்கு வங்காளம் மாநிலத்தின் ஆட்சிநிலவரைகள் தொடர்பான பத்தியில், "மற்றும் 2015 ஆம் ஆண்டு அரசமைப்பு (நூறாம் திருத்தச்) சட்டத்தின் முதலாம் இணைப்புப்பட்டியலின் III ஆம் பகுதியில் சுட்டப்பட்டுள்ள ஆட்சிநிலவரைகளுக்கும் இரண்டாம்இணைப்புப்பட்டியலின்

III ஆம் பகுதியில் சுட்டப்பட்டுள்ள ஆட்சிநிலவரைகளுக்கும் அது தொடர்புடையதாகிற அளவிற்கு 1960 ஆம் ஆண்டு அரசமைப்பு (ஒன்பதாம் திருத்தச்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (இ) கூறில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும் , 2015 ஆம் ஆண்டு அரசமைப்பு (நூறாம் திருத்தச்) சட்டத்தின் முதலாம் இணைப்புப்பட்டியலின் III ஆம் பகுதியில் சுட்டப்பட்டுள்ள ஆட்சிநிலவரைகளும் கூட, ஆனால் இரண்டாம் இணைப்புப்பட்டியலின் III ஆம் பகுதியில் சுட்டப்பட்டுள்ள ஆட்சிநிலவரைகள் நீங்கலாக" என்ற சொற்களும், அடைப்புக்குறிகளும், எண்களும் இறுதியில் சேர்க்கப்படுதல் வேண்டும்.

(இ) மேகலாயா மாநிலத்தின் ஆட்சிநிலவரைகள் தொடர்பான பத்தியில், "மற்றும் 2015 ஆம் ஆண்டு அரசமைப்பு (நூறாம் திருத்தச்) சட்டத்தின் முதலாம் இணைப்புப்பட்டியலின் I ஆம் பகுதியில் சுட்டப்பட்டுள்ள ஆட்சிநிலவரைகள் ஆனால் இரண்டாம் இணைப்புப்-பட்டியலின் IIஆம் பகுதியில் சுட்டப்பட்டுள்ள ஆட்சி-நிலவரைகள் நீங்கலாக" என்ற சொற்களும், அடைப்புக்-குறிகளும், எண்களும் இறுதியில் சேர்க்கப்படுதல் வேண்டும்.

(ஈ) திரிபுரா மாநிலத்தின் ஆட்சிநிலவரைகள் தொடர்பான பத்தியில், “மற்றும் 2015 ஆம் ஆண்டு அரசமைப்பு (நூறாம் திருத்தச்) சட்டத்தின் முதலாம் இணைப்புப்பட்டியலின் II ஆம் பகுதியில் சுட்டப்பட்டுள்ள ஆட்சிநிலவரைகளுக்கு அது தொடர்புடையதாகிற அளவிற்கு, 1960 ஆம் ஆண்டு அரசமைப்பு (ஒன்பதாம் திருத்தச்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (ஈ) கூறில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், 2015 ஆம் ஆண்டு அரசமைப்பு (நூறாம் திருத்தச்) சட்டத்தின் முதலாம் இணைப்புப்பட்டியலின் II ஆம் பகுதியில் சுட்டப்பட்டுள்ள ஆட்சிநிலவரைகள்” என்ற சொற்களும், அடைப்புக் குறிகளும், எண்களும் இறுதியில் சேர்க்கப்படுதல் வேண்டும்.

## முதலாம் இணைப்புப்பட்டியல்

## [2(அ), 2(ஆ) மற்றும் 3 ஆகிய பிரிவுகளைக் காண்க]

## பகுதி I

1974, மே16ஆம் நாள் தேதியிடப்பட்ட உடன்படிக்கையின் 2 ஆம் உறுப்பிற்கும், 2011, செப்டம்பர் 6 ஆம் நாள் தேதியிடப்பட்ட மரபுச்சீர்முறையின் 3(I)(ஆ)(ii)(iii)(iv)(v) ஆகிய உறுப்பிற்கும் தொடர்புடைய அடையப்பெற்ற ஆட்சி-நிலவரை.

## பகுதி II

1974,மே16 ஆம் நாள் தேதியிடப்பட்ட உடன்படிக்கையின் 2 ஆம் உறுப்பிற்கும் 2011, செப்டம்பர் 6 ஆம் நாள் தேதியிடப்பட்ட மரபுச்சீர்முறையின் 3(I)(இ)(i) ஆகிய உறுப்பிற்கும், தொடர்புடைய அடையப்பெற்ற ஆட்சிநிலவரை.

## பகுதி III

1974,மே16ஆம் நாள் தேதியிடப்பட்ட உடன்படிக்கையின் 1(12) மற்றும் 2 ஆகிய உறுப்புகளுக்கும் 2011, செப்டம்பர் 6 ஆம் நாள் தேதியிடப்பட்ட மரபுச்சீர்முறையின் 2(II),3(I)(அ)(iii) (iv)(v)(vi) ஆகிய உறுப்புகளுக்கும் தொடர்புடைய அடையப்பெற்ற ஆட்சிநிலவரை.

## இரண்டாம் இணைப்புப்பட்டியல்

## [2(ஆ),2(ஈ) மற்றும் 3 ஆகிய பிரிவுகளைக் காண்க]

### பகுதி I

1974,மே 16ஆம் நாள் தேதியிடப்பட்ட உடன்படிக்கையின் 2 ஆம் உறுப்பிற்கும் 2011, செப்டம்பர் 6 ஆம் நாள் தேதியிடப்பட்ட மரபுச்சீர்முறையின் 3(1)(ஈ) (i) (ii) ஆகிய உறுப்பிற்கும் தொடர்புடைய மாற்றப்பட்ட ஆட்சிநிலவரை.

### பகுதி II

1974,மே16ஆம் நாள் தேதியிடப்பட்ட உடன்படிக்கையின் 2 ஆம் உறுப்பிற்கும் 2011, செப்டம்பர் 6 ஆம் நாள் தேதியிடப்பட்ட மரபுச்சீர்முறையின் 3(1)(ஆ)(i) ஆகிய உறுப்பிற்கும் தொடர்புடைய மாற்றப்பட்ட ஆட்சிநிலவரை.

### பகுதி III

1974,மே16ஆம் நாள் தேதியிடப்பட்ட உடன்படிக்கையின் 1(12) மற்றும் 2 ஆகிய உறுப்புகளுக்கும் 2011, செப்டம்பர் 6 ஆம் நாள் தேதியிடப்பட்ட மரபுச்சீர்முறையின் 2(II),3(I)(அ)(i) (ii) (vi) ஆகிய உறுப்புகளுக்கும் தொடர்புடைய மாற்றப்பட்ட ஆட்சிநிலவரை.

## மூன்றாம் இணைப்புப்பட்டியல்

## [2 (இ) பிரிவைக் காண்க ]

## இந்தியாவுக்கும் வங்காளதேசத்துக்கும் இடையே நில எல்லையை வரையறைசெய்வது குறித்து இந்தியக் குடியரசு அரசாங்கத்திற்கும் வங்காளதேச மக்கள் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையேயான 1974, மே 16 ஆம் நாள் தேதியிடப்பட்ட உடன்படிக்கையின் மற்றும் தொடர்புடைய பொருட்பாடுகளின் சாரக்குறிப்புகள்

**உறுப்பு 1 (12): அயல்நிலப்பகுதிகள்**

வங்காளதேசத்திலுள்ள இந்திய நிலப்பகுதிகளும் இந்தியாவிலுள்ள வங்காளதேச நிலப்பகுதிகளும் 14 ஆம் பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நிலப்பகுதிகள் நீங்கலாக , வங்காளதேசத்திற்குப் போகும் கூடுதல் பரப்பிடத்திற்காக சரியீட்டிற்கான உரிமைக் கோரிக்கையின்றி, விரைவாகப் பரிமாற்றம் செய்து கொள்ளுதல் வேண்டும்.

**உறுப்பு 2:**

எல்லைக்கோட்டுப் புவிப்படங்கள் ஏற்கெனவே தயாரிக்கப்பட்டு ஏற்கெனவே எல்லைவரையறுக்கப்பட்டுள்ள

பகுதிகளிலுள்ள எதிர்நிலை உடைமையிலுள்ள ஆட்சிநிலவரைகள் எல்லைக் கோட்டுப் புவிப்படங்களில் முழு அதிகாரம் பெற்றவர்களால் ஒப்பமிட்டதிலிருந்து ஆறு மாதங்களுக்குள் பரிமாற்றம் செய்து கொள்ளுதல் வேண்டும் என்பதற்கு இந்தியா மற்றும் வங்காளதேச அரசாங்கங்கள் ஒத்துக்கொள்கின்றன. அவர்கள், தொடர்புடைய புவிப்படங்களில் இயலுமளவு விரைவில், எந்நேர்விலும், 1974, டிசம்பர் 31 ஆம் தேதிக்குப் பிற்படாமல் ஒப்பமிடலாம். ஏற்கெனவே எல்லைவரையறை நிகழ்ந்துள்ள பிற பகுதிகள் பொறுத்து புவிப்படங்களை அச்சிடுவதற்கு விரைவில் நடவடிக்கைகள் எடுக்கப்படலாம். இந்தப் பகுதிகளில் எதிர்நிலை உடைமையில் வைத்திருக்கப்படும் அயல்நிலப்பரப்புகளைப் பரிமாற்றம் செய்வது, 1975, டிசம்பர் 31 ஆம் தேதிக்குள் நிகழும் நோக்கத்திற்காக இவை, 1975, மே 31 ஆம் தேதிக்குள் அச்சிடப்பட்டு அதன் பின்பு, முழு அதிகாரம் பெற்றவர்களால் ஒப்பமிடப்படுதல் வேண்டும். இனியும் எல்லைவரையறை செய்யப்பட வேண்டிய உள்பகுதிகளில், ஆட்சிநிலவரை அதிகாரவரம்பு மாற்றமானது, தொடர்புடைய எல்லைக் கோட்டுப் புவிப்படங்களுக்கு முழு அதிகாரம் பெற்றவர்களால் கையொப்பமிடுவதிலிருந்து ஆறு மாதங்களுக்குள்

நிகழலாம்.

**II. இந்தியாவுக்கும் வங்காளதேசத்துக்கும் இடையே நில எல்லையை வரையறை செய்வது குறித்து இந்தியக் குடியரசு அரசாங்கத்திற்கும் வங்காளதேச மக்கள் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையேயான 2011, செப்டம்பர் 6 ஆம் நாள் தேதியிடப்பட்ட உடன்படிக்கைக்கான மரபுச்-சீர்முறையின் மற்றும் தொடர்புடைய பொருட்பாடுகளின் சாரக்குறிப்புகள்.**

**உறுப்பு 2:**

II. 1974 ஆம் ஆண்டு உடன்படிக்கையின் Iஆம் உறுப்பு 12ஆம் கூறு பின்வருமாறு செயற்படுத்தப்படுதல் வேண்டும்:-

**அயல்நிலப்பகுதிகள்**

III. 1997, ஏப்ரலில் டிஜி எல் ஆர் & எஸ் வங்காளதேசம் மற்றும் டி எல் ஆர் & எஸ் மேற்கு வங்காளம் (இந்தியா) நிலையில் கூட்டாக உறுதிசெய்யப்பட்டு ஒப்பமிடப்பட்ட நிலஅளவீட்டு அயல்நிலப்பகுதி புவிப்படங்களின்படி வங்காளதேசத்திலுள்ள இந்திய நிலப்பகுதிகளும் இந்தியாவிலுள்ள 51 வங்காளதேச நிலப்பகுதிகளும்

வங்காளதேசத்திற்குப் போகும் கூடுதல் பரப்பிடங்களுக்காக சரியீட்டிற்கான உரிமைக் கோரிக்கையின்றி பரிமாற்றம் செய்துகொள்ளுதல் வேண்டும்.

**உறுப்பு 3:**

(I) 1974 ஆம் ஆண்டு உடன்படிக்கையின் 2ஆம் உறுப்பு பின்வருமாறு செயற்படுத்தப்படுதல் வேண்டும்:-

கீழே (அ) முதல் (ஈ) வரையிலான கூறில் முழுவதுமாக விவரிக்கப்பட்டுள்ளவையான, இந்தியா மற்றும் வங்காள-தேசம் ஆகிய இரு நாடுகளின் நில ஆவணங்கள் மற்றும் நிலஅளவைத் துறைகளால் டிசம்பர், 2010 முதல் ஆகஸ்ட், 2011 வரை கூட்டு நில அளவை மூலமாகத் தீர்மானிக்கப்பட்டு அவரவர் எதிர்நிலை உடைமையிலுள்ள நிலப்பரப்பிட அட்டவணைப் புவிப்படத்தில் ( APL புவிப்படம்) முழுவதுமாக வரைந்து காட்டப்பட்டுள்ளவாறான எதிர்நிலை உடைமையில் வைத்திருக்கப்படுகிற ஆட்சிநிலவரைகளுக்கான ஒரு நிர்ணயிக்கப்பட்ட எல்லைக்கோடு என எல்லைக்கோடு வரையப்படுதல் வேண்டும் என்று இந்திய அரசாங்கமும் வங்காளதேச அரசாங்கமும் ஒத்துக்கொள்கின்றன.

தொடர்புடைய எல்லைக்கோட்டுப் புவிப்படங்கள் அச்சிடப்பட்டு முழு அதிகாரம் பெற்றவர்களால் ஒப்பமிடப்பட்டு ஆட்சிநிலவரைசார்ந்த அதிகாரவரம்பு மாற்றமானது அயல்நிலப்பகுதிகள் பரிமாற்றத்துடன் சேர்த்து, உடனிகழ்வாக முடிக்கப்படுதல் வேண்டும். மேலே குறிப்பிடப்பட்ட அட்டவணைப் புவிப்படங்களில் வரைந்து

காட்டப்பட்டுள்ளவாறான, எல்லைக்கோட்டு வரையறை, கீழ்க்கண்டவாறு இருத்தல் வேண்டும்:-

**(அ) மேற்கு வங்காள எல்லைப் பகுதி**

(i) பௌஸ்மரி – மதுகரி (குஷ்டியா – நடியா) பகுதி

2011, ஜூன் மாதம் கூட்டாக நிலஅளவாய்வு செய்து ஒத்துக்கொண்டுள்ளவாறு, எல்லைக்கோடானது, தற்போதுள்ள எல்லைக்கோட்டுத் தூண் எண்கள் 154/5-S முதல் 157/1-S வரையிலிருந்து 1962 ஆம் ஆண்டின் ஒருங்கமைப் புவிப்படத்தில் வரைந்து காட்டப்பட்டுள்ளவாறான, மதபங்கா நதியின் முற்கால ஓட்டத்தின் மையத் தொடர்ச்சிவரை வரையப்படுதல் வேண்டும்.

(ii) அந்தர்கோடா ( குஷ்டியா – நடியா) பகுதி

2011, ஜூன் மாதத்தில் கூட்டாக நில அளவாய்வு செய்து ஒத்துக்கொண்டுள்ளவாறு எல்லைக்கோடானது, தற்போதுள்ள எல்லைக்கோட்டுத் தூண் எண் 152/5-S முதல் எல்லைக்கோட்டுத் தூண் எண் 153/1-S வரையிலிருந்து தற்போதுள்ள மதபங்கா நதிக்கரைத் தொடர்ச்சிவரை வரையப்படுதல் வேண்டும்.

(iii) பகுரியா (குஷ்டியா-நடியா) பகுதி

2011, ஜீன் மாதத்தில் கூட்டாக நில அளவாய்வு

செய்து ஒத்துக்கொண்டுள்ளவாறு எல்லைக்கோடானது, தற்போதுள்ள எல்லைக்கோட்டுத் தூண் எண் 151/1-S முதல் எல்லைக்கோட்டுத் தூண் எண் 152/2-S வரையிலிருந்து மதபங்கா நதிக்கரைத் தொடர்ச்சி வரை வரையப்படுதல் வேண்டும்.

(iv) சார் மகிஷ்கன்டி (குஷ்டியா-நடியா) பகுதி

2011, ஜுன் மாதத்தில் கூட்டாக அளவாய்வு செய்து ஒத்துக்கொண்டுள்ளவாறு எல்லைக்கோடானது தற்போதுள்ள எல்லைக்கோட்டுத் தூண் எண் 153/1-S முதல் எல்லைக்கோட்டுத் தூண் எண் 153/9-S வரையிலிருந்து மதபங்கா நதிக்கரைத் தொடர்ச்சி வரை வரையப்படுதல் வேண்டும்.

(v) ஹரிபல்/குடாடா/பட்டோலி/சபமெரி/எல்லன்பூர் (பதரி) (நௌகான்-மால்டா) பகுதி

2011, ஜுன் மாதத்தில் கூட்டாக நில அளவாய்வு செய்து ஒத்துக்கொண்டுள்ளவாறு எல்லைக் கோடானது, தற்போதுள்ள எல்லைக்கோட்டு தூண் எண் 242/S/13 முதல் எல்லைக்கோட்டுத் தூண் எண் 243/7-S/5 வரையிலானவற்றை இணைக்கும் கோடாகவும் வரையப்படுதல் வேண்டும்.

(vi) பெருபரி (பஞ்சகர்-ஜல்பாய்குரி பகுதி)

வங்காளதேசத்தால் எதிர்நிலை உடைமையில் வைத்திருக்கப்படும் பெருபரி ( பஞ்சகர் - ஜல்பாய்குரி) மற்றும் இந்தியாவால் எதிர்நிலை உடைமையில் வைத்திருக்கப்படும் பெருபரி மற்றும் சிங்கபரா – குடிபரா ( பஞ்சகர்- ஜல்பாய்குரி) பகுதியிலுள்ள எல்லைக் கோடு, 1996-1998 ஆண்டுகளின் போது கூட்டாக வரையறை செய்யப்பட்டவாறு வரையப்படுதல் வேண்டும்.

**(ஆ) மேகலாயா எல்லைப்பகுதி**

(i) லோபாசெரா – நுன்செர்ரா

2010, டிசம்பரில் மாதத்தில் கூட்டாக நில அளவாய்வு செய்து ஒத்துக்கொண்டுள்ளவாறு தற்போதுள்ள லைலாங் பலிச் செராவில் எல்லைக்கோட்டுத் தூண் எண் 1315/4-S முதல் எல்லைக்கோட்டுத் தூண் எண் 1315/15-S வரையிலும், லைலாங் -நூண்செராவில் எல்லைக்கோட்டுத் தூண் எண் 1316/1-S முதல் எல்லைக்கோட்டுத் தூண் எண் 1316/11-S வரையிலும், லைலாங் -லஹிலிங்கில் எல்லைக்கோட்டுத் தூண் எண் 1317 முதல் எல்லைக்கோட்டுத் தூண் எண் 1317/13-S வரையிலும் மற்றும் லைலாங்-லோபசெராவில் எல்லைக்கோட்டுத்தூண் எண் 1318/1-S முதல் எல்லைக்-கோட்டுத் தூண் எண் 1318/2/-S வரையில் தேயிலைத்-தோட்டங்களின் கரைத் தொடர்வரையில் எல்லைக்கோடு

வரையப்படுதல் வேண்டும்.

(ii ) பைர்திவா/படுவா பகுதி

எல்லைக்கோடானது, கூட்டாக நிலஅளவாய்வு செய்து பரஸ்பரம் ஒத்துக்கொண்டுள்ள கோட்டின்படி தற்போதுள்ள எல்லைக்கோட்டுத் தூண் எண் 1270/1-S-லிருந்து எல்லைக்கோட்டுத் தூண் எண் 1271/1-T வரை வரையப்படுதல் வேண்டும். பைர்திவா கிராமத்திலிருந்து இந்திய நாட்டினர் ஒத்துக்கொண்டுள்ள புவிப்படத்தின் முனை எண் 6 அருகாமையிலுள்ள பியாங் நதியிலிருந்து நீர் எடுத்துக்கொள்வதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும் என்பதற்கு தரப்பினர்கள் ஒத்துக்கொள்கின்றனர்.

(iii) லிங்கத் பகுதி

(அஅ) லிங்கத் -I / குளுன்ச்சொர்ரா மற்றும்

லிங்கத் -II /குளுன்ச்சொர்ரா

எல்லைக்கோடானது, கூட்டாக நிலஅளவாய்வு செய்து பரஸ்பரம் ஒத்துக்கொண்டுள்ள கோட்டின்படி தற்போதுள்ள எல்லைக்கோட்டுத் தூண் எண் 1264 /4-S முதல் எல்லைக் கோட்டுத் தூண் எண் 1265 வரையிலும் மற்றும் BP எண் 1265/6-S முதல் 1265 /9-S `வரையிலும் வரையப்படுதல் வேண்டும்.

(அ ஆ) லிங்கத் -III /சொனர்ஹத்

எல்லைக்கோடானது, தற்போதுள்ள எல்லைக் கோட்டுத் தூண் எண் 1266/13-S-லிருந்து நல்லாஹ் தென்பக்கம் ஊடாக அது கிழக்கு -மேற்கு திசையில் இன்னொரு நல்லாஹை சந்திக்கும் வரையிலும், அதன்பின்பு அது கிழக்கில் நல்லாஹின் வடக்கு முனை ஊடாகச் சென்று அது குறியீட்டுத் தூண் எண்கள் 1267/4-R-B மற்றும் 1267/3-R-I வடக்கில் தற்போதுள்ள பன்னாட்டிடை எல்லைக்கோட்டைச் சந்திக்கும் வரையிலும் வரையப்படுதல் வேண்டும்.

(iv) டௌகி -தமபில் பகுதி

எல்லைக்கோடானது, தற்போதுள்ள எல்லைக்கோட்டுத் தூண் எண் 1275/1-S முதல் எல்லைக்கோட்டுத் தூண் எண் 1275/7-S வரையிலும் இணைக்கும் ஒரு நேர்கோட்டினால் வரையப்படுதல் வேண்டும். இந்தப் பகுதியில் 'பூஜ்ய கோட்டில்' வேலியடைப்பதற்கு தரப்பினர்கள் ஒத்துக் கொள்கின்றனர்.

(v) நல்ஜுரி / ஸ்ரீபூர் பகுதி

(அ) நல்ஜுரி I

எல்லைக்கோடானது , எல்லைக்கோட்டுப் புவிப்பட எண் 166 இல் வரைந்து காட்டப்பட்டுள்ளவாறு தெற்கு திசையில்

தற்போதுள்ள எல்லைக்கோட்டுத் தூண் எண் 1277/2-S

லிருந்து மூன்று மனையிடங்கள் வரையில் அது எல்லைக்கோட்டுத் தூண் எண் 1277/5-T யிலிருந்து பாய்ந்துவரும் நல்லாஹை சந்திக்கிறவரையிலும், அதன் பின்பு அது வங்காளதேசத்தின் பக்கமாக 2 மனையிடங்கள் வரை தென் திசையில் நல்லாஹின் மேற்குக் கரை ஊடாகச் செல்லும், அதன்பின்பு அது கிழக்கு நோக்கி எல்லைக்கோட்டுத் தூண் எண் 1277/4-S-லிருந்து தென் திசையில் வரையப்பட்ட ஒரு கோட்டினை சந்திக்கும் வரையில் செல்லும் ஒரு கோடாகும்.

(அஆ) நல்ஜூரி III

எல்லைக்கோடானது, தற்போதுள்ள எல்லைக்கோட்டுத் தூண் எண் 1278/2-S முதல் எல்லைக்கோட்டு தூண் எண் 1279/3-S வரையிலும் ஒரு நேர் கோட்டில் வரையப்படுதல் வேண்டும்.

(vi) முக்தபூர் / திபிர் ஹவோர் பகுதி

இந்திய நாட்டினர் காளி கோயிலுக்கு வருகை தருவதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும் என்பதற்கும் முக்தபூர் பகுதி கரையோரத்திலிருந்து முக்தபூர்/திபிர் ஹவோரியிலுள்ள நீர்நிலையில் நீர் எடுத்துக்கொள்வதற்கும் மீன் பிடிக்கும் உரிமையைப் பயன்படுத்திக் கொள்வதற்கும் கூட அனுமதிக்கப்படுதல் வேண்டும் என்பதற்கும்

தரப்பினர்கள் ஒத்துக்கொள்கின்றனர்.

## (இ) திரிபுரா எல்லைப்பகுதி

(i) திரிபுரா / மொல்வி பஜார் எல்லைப்பகுதியிலுள்ள சந்தன்நகர் -சம்பரய் தேயிலைத் தோட்டப் பகுதி

2011, ஜூலை, மாதத்தில் கூட்டாக அளவாய்வுசெய்து ஒத்துக் கொண்டுள்ளவாறு எல்லைக்கோடானது தற்போதுள்ள எல்லைக்கோட்டுத் தூண் எண் 1904 முதல் எல்லைக் கோட்டுத் தூண் எண் 1905 வரையிலும் சோனாராய்செரா நதி ஊடாக வரையப்படுதல் வேண்டும்.

## (ஈ) அசாம் எல்லைப்பகுதி

(i) அசாம் எல்லைப்பகுதியிலுள்ள கலபரி (போரோய்பரி) பகுதி

2011, ஆகஸ்ட் மாதத்தில் கூட்டாக அளவாய்வு செய்து ஒத்துக்கொண்டுள்ளபடி எல்லைக் கோடானது, தற்போதுள்ள எல்லைக்கோட்டுத் தூண் எண் 1066/24-T முதல் எல்லைக்கோட்டுத் தூண் எண் 1067/16-T வரையிலும் வரையப்படுதல் வேண்டும்.

(ii) அசாம் எல்லைப்பகுதியிலுள்ள பல்லதல் பகுதி எல்லைக்கோடானது, தற்போதுள்ள

எல்லைக் கோட்டுத் தூண் எண் 1370/3-S முதல் 1371/6-S வரையிலும், தேயிலைத் தோட்டத்தின் வெளிமுனையைத் தொடர்ந்தும் வெற்றிலைத் தோட்டத்தின் வெளிமுனை ஊடாக எல்லைக்கோட்டுத் தூண் எண் 1372 முதல் 1373/2–S வரையிலும் வரையப்படுதல் வேண்டும்.

**III. 1974, மே 16 ஆம் நாள் தேதியிடப்பட்ட உடன்படிக்கையின் 1(12) உறுப்பினையும், 2011, செப்டம்பர் 6 ஆம் நாள் தேதியிடப்பட்ட உடன்படிக்கைக்கான மரபுச்சீர்முறையினையும் பின்பற்றி இந்தியாவுக்கும் வங்காளதேசத்துக்கும் இடையேயான அயல்நிலப்பகுதிகளின் பரிமாற்றப் பட்டியல்.**

## (அ) பரிமாற்றம் செய்வதற்குரிய வங்காளதேசத்திலுள்ள இந்திய நிலப்பகுதிகள், பரப்பளவுடன்

| வரிசை எண் | சிட்ஸின் பெயர் | சிட் எண் | வங்காளதேச காவல் நிலையத்திற் குட்பட்டிருப்பன | மேற்கு - வங்காள காவல் நிலையத்திற் குட்பட்டிருப்பன | ஏக்கர் களில் பரப்பிடம் |
|---|---|---|---|---|---|
| | | அ. தனி சிட்ஸ்சுடனான அயல்நிலப்பகுதிகள் | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | கராட்டி | 75 | போச்சகர் | ஹால்டிபாரி | 58.23 |
| 2. | கராட்டி | 76 | போச்சகர் | ஹால்டிபாரி | 0.79 |
| 3. | கராட்டி | 77 | போச்சகர் | ஹால்டிபாரி | 18 |
| 4. | கராட்டி | 78 | போச்சகர் | ஹால்டிபாரி | 958.66 |
| 5. | கராட்டி | 79 | போச்சகர் | ஹால்டிபாரி | 1.74 |
| 6. | கராட்டி | 80 | போச்சகர் | ஹால்டிபாரி | 73.75 |
| 7. | பிங்கிமரி பகுதி- I | 73 | போச்சகர் | ஹால்டிபாரி | 6.07 |

| வரிசை எண் | சிட்ஸின் பெயர் | சிட் எண் | வங்காளதேச காவல் நிலையத்திற் குட்பட்டிருப்பன | மேற்கு - வங்காள காவல் நிலையத்திற் குட்பட்டிருப்பன | ஏக்கர் களில் பரப்பிடம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 8. | நசிர்கன்ஜா | 41 | போடா | ஹால்டிபாரி | 58.32 |
| 9. | நசிர்கன்ஜா | 42 | போடா | ஹால்டிபாரி | 434.29 |
| 10. | நசிர்கன்ஜா | 44 | போடா | ஹால்டிபாரி | 53.47 |
| 11. | நசிர்கன்ஜா | 45 | போடா | ஹால்டிபாரி | 1.07 |
| 12. | நசிர்கன்ஜா | 46 | போடா | ஹால்டிபாரி | 17.95 |
| 13. | நசிர்கன்ஜா | 47 | போடா | ஹால்டிபாரி | 3.89 |
| 14. | நசிர்கன்ஜா | 48 | போடா | ஹால்டிபாரி | 73.27 |
| 15. | நசிர்கன்ஜா | 49 | போடா | ஹால்டிபாரி | 49.05 |
| 16. | நசிர்கன்ஜா | 50 | போடா | ஹால்டிபாரி | 5.05 |
| 17. | நசிர்கன்ஜா | 51 | போடா | ஹால்டிபாரி | 0.77 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 18. | நசிர்கன்ஜா | 52 | போடா | ஹால்டிபரி | 1.04 |
| 19. | நசிர்கன்ஜா | 53 | போடா | ஹால்டிபரி | 1.02 |
| 20. | நசிர்கன்ஜா | 54 | போடா | ஹால்டிபரி | 3.87 |
| 21. | நசிர்கன்ஜா | 55 | போடா | ஹால்டிபரி | 12.18 |
| 22. | நசிர்கன்ஜா | 56 | போடா | ஹால்டிபரி | 54.04 |
| 23. | நசிர்கன்ஜா | 57 | போடா | ஹால்டிபரி | 8.27 |
| 24. | நசிர்கன்ஜா | 58 | போடா | ஹால்டிபரி | 14.22 |
| 25. | நசிர்கன்ஜா | 60 | போடா | ஹால்டிபரி | 0.52 |
| 26. | புடிமாரி | 59 | போடா | ஹால்டிபரி | 122.8 |

| வரிசை எண் | சிட்ஸின் பெயர் | சிட் எண் | வங்காளதேச காவல் நிலையத்திற் குட்பட்டிருப்பன | மேற்கு - வங்காள காவல் நிலையத்திற் குட்பட்டிருப்பன | ஏக்கர் களில் பரப்பிடம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 27. | டைகாடா சாட் | 38 | போடா | ஹால்டிபரி | 499.21 |
| 28. | சல்பரி | 37 | போடா | ஹால்டிபரி | 1188.93 |
| 29. | கஜல் டிகி | 36 | போடா | ஹால்டிபரி | 771.44 |
| 30. | நடக்டோகா | 32 | போடா | ஹால்டிபரி | 162.26 |
| 31. | நடக்டோகா | 33 | போடா | ஹால்டிபரி | 0.26 |
| 32. | பீயூலடங்காசாட் | 35 | போடா | ஹால்டிபரி | 0.83 |
| 33. | பலபாரா லாக்ரபர் | 3 | டெபிகஞ் | ஹால்டிபரி | 1752.44 |
| 34. | பராகன்கிகரிஜா சிடல்டாகா | 30 | டிம்லா | ஹால்டிபரி | 7.71 |
| 35. | பராகன்கிகரிஜா சிடல்டாகா | 29 | டிம்லா | ஹால்டிபரி | 36.83 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 36. | பரகன்கிர் | 28 | டிம்லா | ஹால்டிபரி | 30.53 |
| 37. | நகர்ஜிகோபரி | 31 | டிம்லா | ஹால்டிபரி | 33.41 |
| 38. | குச்லிபரி | 26 | பட்க்ராம் | மெக்லிகாஞ் | 5.78 |
| 39. | குச்லிபரி | 27 | பட்க்ராம் | மெக்லிகாஞ் | 2.04 |
| 40. | பரா குச்லிபரி | P.S மெக்லிகாஞ் J.L107 எஞ்சிய பகுதி | பட்க்ராம் | மெக்லிகாஞ் | 4.35 |
| 41. | ஜமால்டஹா-பாலபுகாரி | 6 | பட்க்ராம் | மெக்லிகாஞ் | 5.24 |

| வரிசை எண் | சிட்ஸின் பெயர் | சிட் எண் | வங்காளதேச காவல் நிலையத்திற் குட்பட்டிருப்பன | மேற்கு - வங்காள காவல் நிலையத்திற் குட்பட்டிருப்பன | ஏக்கர் களில் பரப்பிடம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 42. | உபன்சவுகி குச்லிபரி | 115/2 | பட்க்ராம் | மெக்லிகாஞ் | 0.32 |
| 43. | உபன்சவுகி குச்லிபரி | 7 | பட்க்ராம் | மெக்லிகாஞ் | 44.04 |
| 44. | போத்ன்ரி | 11 | பட்க்ராம் | மெக்லிகாஞ் | 36.83 |
| 45. | பாலபுகாரி | 5 | பட்க்ராம் | மெக்லிகாஞ் | 55.91 |
| 46. | பரா கன்கிர் | 4 | பட்க்ராம் | மெக்லிகாஞ் | 50.51 |
| 47. | பரா கன்கிர் | 9 | பட்க்ராம் | மெக்லிகாஞ் | 87.42 |
| 48. | சாட் பக்டோக்ரா | 10 | பட்க்ராம் | மெக்லிகாஞ் | 41.7 |
| 49. | ரதன்பூர் | 11 | பட்க்ராம் | மெக்லிகாஞ் | 58.91 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 50. | பக்டோக்ரா | 12 | பட்க்ராம் | மெக்லிகாஞ் | 25.49 |
| 51. | பல்கொர் டாப்ரி | **P.s மெலிகான்ஜ்ஜின் J.L107இன்** எஞ்சிய பகுதி | பட்க்ராம் | மெக்லிகாஞ் | 0.88 |
| 52. | கர்காரியா | 15 | பட்க்ராம் | மெக்லிகாஞ் | 60.74 |
| 53. | கர்காரியா | 13 | பட்க்ராம் | மெக்லிகாஞ் | 51.62 |
| 54. | லோட்டாமரி | 14 | பட்க்ராம் | மெக்லிகாஞ் | 110.92 |
| 55. | போத்பரி | 16 | பட்க்ராம் | மெக்லிகாஞ் | 205.46 |
| 56. | கோமட் சங்கரபந்தா | 16A | பட்க்ராம் | மெக்லிகாஞ் | 42.8 |
| 57. | கோமட் சங்கரபந்தா | 17A | பட்க்ராம் | மெக்லிகாஞ் | 16.01 |

| வரிசை எண் | சிட்ஸின் பெயர் | சிட் எண் | வங்காளதேச காவல் நிலையத்திற் குட்பட்டிருப்பன | மேற்கு - வங்காள காவல் நிலையத்திற் குட்பட்டிருப்பன | ஏக்கர் களில் பரப்பிடம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 58. | பானிசாலா | 17 | பட்க்ராம் | மெக்லிகாஞ் | 137.66 |
| 59. | துவாரிகமரி காஸ்பாஸ் | 18 | பட்க்ராம் | மெக்லிகாஞ் | 36.5 |
| 60. | பானிசாலா | 153/P | பட்க்ராம் | மெக்லிகாஞ் | 0.27 |
| 61. | பானிசாலா | 153/O | பட்க்ராம் | மெக்லிகாஞ் | 18.01 |
| 62. | பானிசாலா | 19 | பட்க்ராம் | மெக்லிகாஞ் | 64.63 |
| 63. | பானிசாலா | 21 | பட்க்ராம் | மெக்லிகாஞ் | 51.4 |
| 64. | லோட்டாமரி | 20 | பட்க்ராம் | மெக்லிகாஞ் | 283.53 |
| 65. | லோட்டாமரி | 22 | பட்க்ராம் | மெக்லிகாஞ் | 98.85 |
| 66. | துவாரிகமரி | 23 | பட்க்ராம் | மெக்லிகாஞ் | 39.52 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 67. | துவாரிகமரி | 25 | பட்க்ராம் | மெக்லிகாஞ் | 45.73 |
| 68. | சாட் போதட் | 24 | பட்க்ராம் | மெக்லிகாஞ் | 56.11 |
| 69. | பாகடா | 131 | பட்க்ராம் | ஹதபங்கா | 22.35 |
| 70. | பாகடா | 132 | பட்க்ராம் | ஹதபங்கா | 11.96 |
| 71. | பாகடா | 130 | பட்க்ராம் | ஹதபங்கா | 20.48 |
| 72. | போக்ரம் குரி | 133 | பட்க்ராம் | ஹதபங்கா | 1.44 |
| 73. | செனகாடா | 134 | பட்க்ராம் | மெக்லிகாஞ் | 7.81 |
| 74. | பான்ஸ்கடா | 119 | பட்க்ராம் | மதாபன்கா | 413.81 |
| 75. | பான்ஸ்கடா | 120 | பட்க்ராம் | மதாபன்கா | 30.75 |
| வரிசை எண் | சிட்ஸின் பெயர் | சிட் எண் | வங்காளதேச காவல் நிலையத்திற் குட்பட்டிருப்பன | மேற்கு - வங்காள காவல் நிலையத்திற் குட்பட்டிருப்பன | ஏக்கர் களில் பரப்பிடம் |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 76. | பான்ஸ்கடா | 121 | பட்க்ராம் | மதாபன்கா | 12.15 |
| 77. | பான்ஸ்கடா | 113 | பட்க்ராம் | மதாபன்கா | 57.86 |
| 78. | பான்ஸ்கடா | 112 | பட்க்ராம் | மதாபன்கா | 315.04 |
| 79. | பான்ஸ்கடா | 114 | பட்க்ராம் | மதாபன்கா | 0.77 |
| 80. | பான்ஸ்கடா | 115 | பட்க்ராம் | மதாபன்கா | 29.2 |
| 81. | பான்ஸ்கடா | 122 | பட்க்ராம் | மதாபன்கா | 33.22 |
| 82. | பான்ஸ்கடா | 127 | பட்க்ராம் | மதாபன்கா | 12.72 |
| 83. | பான்ஸ்கடா | 128 | பட்க்ராம் | மதாபன்கா | 2.33 |
| 84. | பான்ஸ்கடா | 117 | பட்க்ராம் | மதாபன்கா | 2.55 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 85. | பான்ஸ்கடா | 118 | பட்க்ராம் | மதாபன்கா | 30.98 |
| 86. | பான்ஸ்கடா | 125 | பட்க்ராம் | மதாபன்கா | 0.64 |
| 87. | பான்ஸ்கடா | 126 | பட்க்ராம் | மதாபன்கா | 1.39 |
| 88. | பான்ஸ்கடா | 129 | பட்க்ராம் | மதாபன்கா | 1.37 |
| 89. | பான்ஸ்கடா | 116 | பட்க்ராம் | மதாபன்கா | 16.96 |
| 90. | பான்ஸ்கடா | 123 | பட்க்ராம் | மதாபன்கா | 24.37 |
| 91. | பான்ஸ்கடா | 124 | பட்க்ராம் | மதாபன்கா | 0.28 |
| 92. | கோடாமரிசிட் | 135 | ஹடிபந்தா | சிடால்குச்சி | 126.59 |
| 93. | கோடாமரிசிட் | 136 | ஹடிபந்தா | சிடால்குச்சி | 20.02 |

| வரிசை எண் | சிட்ஸின் பெயர் | சிட் எண் | வங்காளதேச காவல் நிலையத்திற் குட்பட்டிருப்பன | மேற்கு - வங்காள காவல் நிலையத்திற் குட்பட்டிருப்பன | ஏக்கர் களில் பரப்பிடம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 94. | பனபாச்சை | 151 | லால்மேனிர்ஹட் | டின்ஹடா | 217.29 |
| 95. | பனபாச்சை பிடார்குதி | 152 | லால்மேனிர்ஹட் | டின்ஹடா | 81.71 |
| 96. | டாசியர் சரா | 150 | புல்பரி | டின்ஹடா | 1643.44 |
| 97. | டாகுர்ஹட் - டாகினிர்குதி | 156 | குரிக்ராம் | டின்ஹடா | 14.27 |
| 98. | கலமாடி | 141 | புருன்காமரி | டின்ஹடா | 21.21 |
| 99. | பாஹோப்காஞ் | 153 | புருன்காமரி | டின்ஹடா | 31.58 |
| 100. | பௌடிகுர்ஸா | 142 | புருன்காமரி | டின்ஹடா | 45.63 |
| 101. | பாரா கோச்சுல்கா | 143 | புருன்காமரி | டின்ஹடா | 39.99 |
| 102. | கௌ சுல்கா II | 147 | புருன்காமரி | டின்ஹடா | 0.9 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 103. | கௌ சுல்கா I | 146 | புருன்காமரி | டின்ஹடா | 8.92 |
| 104. | திகால்டரி II | 145 | புருன்காமரி | டின்ஹடா | 8.81 |
| 105. | திகால்டரி I | 144 | புருன்காமரி | டின்ஹடா | 12.31 |
| 106. | சோடோகரால்ஜி ஹோரா II | 149 | புருன்காமரி | டின்ஹடா | 17.85 |
| 107. | சோடோகரால்ஜி ஹோரா I | 148 | புருன்காமரி | டின்ஹடா | 35.74 |

| வரிசை எண் | சிட்ஸின் பெயர் | சிட் எண் | வங்காளதேச காவல் நிலையத்திற் குட்பட்டிருப்பன | மேற்கு - வங்காள காவல் நிலையத்திற் குட்பட்டிருப்பன | ஏக்கர் களில் பரப்பிடம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 108. | 1 சிட் * பெயரும் JLஎண்ணும் இல்லாமல் JL எண் 38 இன் தெற்குக் கடைக் கோடியிலும் JL எண் 39 இன் தெற்குக் கடைக் கோடியிலும் | | பட்க்ராம் | மதாபன்கா | 3.5 |

(வட்டாரத்தில்

அசோகாபரி**

எனப்படுவதும்)

* திருத்தப்பட்டது 2002, செப்டம்பர் 29 முதல் அக்டோபர் 2 வரை கொல்கத்தாவில் நடைபெற்ற (54 ஆம்) இந்தியா –வங்காளதேச எல்லைக்கோடு மாநாடு 150 ஐக் காண்க.

** திருத்தப்பட்டது: 2003, செப்டம்பர் 18 முதல் 20 வரை இந்தியாவில் கோச்பிகரில் நடைபெற்ற (56 ஆம்) இந்தியா –வங்களாதேச எல்லைக்கோடு மாநாடு 152 ஐக் காண்க.

| வரிசை எண் | சிட்ஸின் பெயர் | சிட் எண் | வங்காளதேச காவல் நிலையத்திற் குட்பட்டிருப்பன | மேற்கு - வங்காள காவல் நிலையத்திற் குட்பட்டிருப்பன | ஏக்கர்களில் பரப்பிடம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |

பிரிந்து எஞ்சிய சிட்ஸுடன் கூடிய அயல்நிலப்பகுதிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 109. | (i) பியூலடன்கா | 34 | ஹால்டிபரி | போடா | 862.46 |
| | (ii) பியூலடன்கா | துண்டுப்பகுதி | ஹால்டிபரி | டெபிகாஞ் | |

| | | | | |
|---|---|---|---|---|
| 110. | (i) கோத்பாஜ்னி | 2 | ஹால்டிபரி டெபிகாஞ் | 2012.27 |
| | (ii) கோத்பாஜ்னி | துண்டுப்பகுதி | ஹால்டிபரி டெபிகாஞ் | |
| | (iii) கோத்பாஜ்னி | துண்டுப்பகுதி | ஹால்டிபரி டெபிகாஞ் | |
| | (iv) கோத்பாஜ்னி | துண்டுப்பகுதி | ஹால்டிபரி டெபிகாஞ் | |
| 111. | (i) டஹாலா | காக்ராப்ரி | ஹால்டிபரி டெபிகாஞ் | 2650.35 |
| | (ii) டஹாலா | துண்டுப்பகுதி | ஹால்டிபரி டெபிகாஞ் | |
| | (iii) டஹாலா | துண்டுப்பகுதி | ஹால்டிபரி டெபிகாஞ் | |
| | (iv) டஹாலா | துண்டுப்பகுதி | ஹால்டிபரி டெபிகாஞ் | |
| | (v) டஹாலா | துண்டுப்பகுதி | ஹால்டிபரி டெபிகாஞ் | |
| | (vi) டஹாலா | துண்டுப்பகுதி | ஹால்டிபரி டெபிகாஞ் | |
| | | | | **17160.63** |

அயல்நிலப்பகுதிகள் குறித்து மேலே கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள், 1996, அக்டோபர் 9 முதல் 12 வரையிலும் கல்கத்தாவில் நடைபெற்ற இந்தோ – வங்காளதேச மாநாட்டின்போதும், அத்துடன், 1996, நவம்பர் 21 முதல் 24 வரையிலும் ஜல்பய்குரி ( மேற்கு வங்காளம் ) பன்ச்சகர் (வங்காளதேசம்) நிலப்பகுதியில் கூட்டுக்கள ஆய்வின்போதும் இந்தியாவும் வங்காளதேசமும் வைத்திருந்த பதிவணங்களுடன் கூட்டாக ஒப்பிட்டுப்பார்த்து சீர்செய்யப்பட்டுள்ளன.

குறிப்பு:- 1996-97 களப் பணியின்போது செய்யப்பட்ட கூட்டுச் செயற்கள ஆய்வில் மேலே வரிசை எண் 108 –இல் நிலப்பகுதியின் பெயர்,அசோகாபரி என கண்டறியப்பட்டிருக்கிறது.

**பிரிக் J.R. பீட்டர்**

**முகமது ஷபியுத்தின்**
தலைமை இயக்குநர்,

இயக்குநர் நிலப்பதிவணங்கள் மற்றும் நிலஅளவை (பதவிவழி) மேற்கு வங்காளம், இந்தியா & இயக்குநர், கிழக்கு வட்டம் இந்திய நிலஅளவை கல்கத்தா.

நிலப்பதிவணங்கள் மற்றும் நிலஅளவைகள், வங்காளதேசம்.

## ஆ பரிமாற்றம் செய்வதற்குரிய இந்தியாவிலுள்ள வங்காளதேச நிலப்பகுதிகள் பரப்பளவுடன்

| வரிசை எண் | சிட்ஸின் பெயர் | மேற்கு வங்காள காவல் நிலையத்திற்குட்பட்டிருப்பன | வங்காள தேச காவல் நிலையத்திற்குட்பட்டிருப்பன | J.L எண் | ஏக்கர்களில் பரப்பிடம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | அ. தனிப்பட்ட சிட்ஸ்சுடனான அயல்நிலப்பகுதிகள் | | | | |
| 1. | சிட் குச்லிபரி | மெக்லிகாஞ் | பட்க்ராம் | 22 | 370.64 |
| 2. | குச்லிபரியின்- சிட் நிலம் | மெக்லிகாஞ் | பட்க்ராம் | 24 | 1.83 |
| 3. | பாலபு காரி | மெக்லிகாஞ் | பட்க்ராம் | 21 | 331.64 |
| 4. | பன்பரிஎண்2 இன் சிட் நிலம் | மெக்லிகாஞ் | பட்க்ராம் | 20 | 1.13 |
| 5. | சிட் பன்பரி | மெக்லிகாஞ் | பட்க்ராம் | 18 | 108.59 |
| 6. | தபால்சடி மிர்கிபூர் | மெக்லிகாஞ் | பட்க்ராம் | 15 | 173.88 |
| 7. | பாமண்டல் | மெக்லிகாஞ் | பட்க்ராம் | 11 | 2.24 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 8. | சிட் தபால்சடி | மெக்லிகாஞ் | பட்க்ராம் | 14 | 66.58 |
| 9. | தபால்சடி | மெக்லிகாஞ் | பட்க்ராம் | 13 | 60.45 |
| 10. | ஸ்ரீராம்பூர் | மெக்லிகாஞ் | பட்க்ராம் | 8 | 1.05 |
| 11. | ஜோட் நிஜ்ஜாமா | மெக்லிகாஞ் | பட்க்ராம் | 3 | 87.54 |

| வரிசை எண் | சிட்ஸின் பெயர் | மேற்கு வங்காள காவல் நிலையத்திற்குட்பட்டிருப்பன | வங்காள தேச காவல் நிலையத்திற்குட்பட்டிருப்பன | J.L எண் | ஏக்கர்களில் பரப்பிடம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 12. | ஜகட்பெர்எண்3-இன் சிட் நிலம் | மதபாங்கா | பட்க்ராம் | 37 | 69.84 |
| 13. | ஜகட்பெர்எண்1 - இன் சிட் நிலம் | மதபாங்கா | பட்க்ராம் | 35 | 30.66 |
| 14. | ஜகட்பெர்எண்2 - இன் சிட் நிலம் | மதபாங்கா | பட்க்ராம் | 36 | 27.09 |
| 15. | சிட் கோகோபரி | மதபாங்கா | பட்க்ராம் | 47 | 29.49 |
| 16. | சிட்-பண்டார்டாஹா | மதபாங்கா | பட்க்ராம் | 67 | 39.96 |
| 17. | தபால்குரி | மதபாங்கா | பட்க்ராம் | 52 | 12.5 |
| 18. | சிட் தபால்குரி | மதபாங்கா | பட்க்ராம் | 53 | 22.31 |
| 19. | தாபல்குரி எண் 3-இன் சிட் நிலம் | மதபாங்கா | பட்க்ராம் | 70 | 1.33 |
| 20. | தாபல்குரி எண் 4-இன் சிட் நிலம் | மதபாங்கா | பட்க்ராம் | 71 | 4.55 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 21. | தாபல்குரி எண் 5-இன் சிட் நிலம் | மதபாங்கா | பட்க்ராம் | 72 | 4.12 |
| 22. | தாபல்குரி எண் 1-இன் சிட் நிலம் | மதபாங்கா | பட்க்ராம் | 68 | 26.83 |
| 23. | தாபல்குரி எண் 2-இன் சிட் நிலம் | மதபாங்கா | பட்க்ராம் | 69 | 13.95 |

| வரிசை எண் | சிட்ஸின் பெயர் | மேற்கு வங்காள காவல் நிலையத்திற்குட்பட்டிருப்பன | வங்காள தேச காவல் நிலையத்திற்குட்பட்டிருப்பன | J.L எண் | ஏக்கர்களில் பரப்பிடம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 24. | மஹிஸ்மரி | சிடால்குச்சி | பட்க்ராம் | 54 | 122.77 |
| 25. | புரா சராடுபி | சிடால்குச்சி | ஹடிபாதா | 13 | 34.96 |
| 26. | பல்னாபூர் | சிடால்குச்சி | பட்க்ராம் | 64 | 505.56 |
| 27. | அமஜ்ஹோல் | சிடால்குச்சி | ஹடிபந்தா | 57 | 1.25 |
| 28. | கிஷ்மத் பட்ரிகாச் | டின்ஹடா | காலிகாஞ் | 82 | 209.95 |
| 29. | துர்காபூர் | டின்ஹடா | காலிகாஞ் | 83 | 20.96 |
| 30. | பன்சுவாகாமர் கிடல்டாஹா | டின்ஹடா | லால்மோனிர்கட் | 1 | 24.54 |
| 31. | போடுர்குதி | டின்ஹடா | லால்மோனிர்கட் | 37 | 589.94 |
| 32. | பாஷ்சிம்பகாலிர் சாரா | டின்ஹடா | புருங்காமரி | 38 | 151.98 |
| 33. | மத்தியபகாலிர் சாரா | டின்ஹடா | புருங்காமரி | 39 | 32.72 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 34. | புர்பாபகாலிர் சாரா | டின்ஹடா | புருங்காமரி | 40 | 12.23 |
| 35. | மத்ய மாசால்டங்கா | டின்ஹடா | புருங்காமரி | 3 | 136.66 |
| 36. | மத்யாச்சிட் மாசல்டங்கா | டின்ஹடா | புருங்காமரி | 8 | 11.87 |

| வரிசை எண் | சிட்ஸின் பெயர் | மேற்கு வங்காள காவல் நிலையத்திற்குட்பட்டிருப்பன | வங்காள தேச காவல் நிலையத்திற்குட்பட்டிருப்பன | J.L எண் | ஏக்கர்களில் பரப்பிடம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 37. | பாஷ்சிம்ச் சிட் மாசால்டங்கா | டின்ஹடா | புருங்காமரி | 7 | 7.6 |
| 38. | உட்டர் மாசால்டங்கா | டின்ஹடா | புருங்காமரி | 2 | 27.29 |
| 39. | காச்சுயா | டின்ஹடா | புருங்காமரி | 5 | 119.74 |
| 40. | உட்டர் பன்ஸ்ஜனி | டாபன்காஞ் | புருங்காமரி | 1 | 47.17 |
| 41. | சாட் டிலை | டாபன்காஞ் | புருங்காமரி | 17 | 81.56 |

**ஆ .துண்டாக பிரிக்கப்பட்ட சிட்ஸடன் நிலப்பகுதிகள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 42 | (i)நல்க்ராம் | சிடால்குச்சி | பட்க்ராம் | 65 | 1397.34 |
| | (ii)நல்க்ராம் (துண்டுப் பகுதி) | சிடால்குச்சி | பட்க்ராம் | 65 | |
| | (iii)நல்க்ராம் (துண்டுப் பகுதி) | சிடால்குச்சி | பட்க்ராம் | 65 | |
| 43. | (i) சிட்நல்க்ராம் | சிடால்குச்சி | பட்க்ராம் | 66 | 49.5 |
| | (ii)சிட்நல்க்ராம் (துண்டுப் பகுதி) | சிடால்குச்சி | பட்க்ராம் | 66 | |

| வரிசை எண் | சிட்ஸின் பெயர் | மேற்கு வங்காள காவல் நிலையத்திற்குட்பட்டிருப்பன | வங்காள தேச காவல் நிலையத்திற்குட்பட்டிருப்பன | J.L எண் | ஏக்கர்களில் பரப்பிடம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 44. | (i) பேட்ரிகாச் | டின்ஹடா | கலிகாஞ் | 81 | 577.37 |
| | (ii)பேட்ரிகாச் (துண்டுப் பகுதி) | டின்ஹடா | கலிகாஞ் | 81 | |
| | (iii) பேட்ரிகாச் (துண்டுப் பகுதி) | டின்ஹடா | புல்பரி | 9 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 45. | (i) கரலா | டின்ஹடா | புல்பரி | 9 | 269.91 |
| | (ii)கரலா (குண்டுப் பகுதி) | டின்ஹடா | புல்பரி | 9 | |
| | (iii)கரலா (குண்டுப் பகுதி) | டின்ஹடா | புல்பரி | 8 | |
| 46. | (i)சிப்ரசாத் முஸ்டாடி | டின்ஹடா | புல்பரி | 8 | 373.2 |
| | (ii)சிப்ரசாத் முஸ்டாடி (குண்டுப் பகுதி) | டின்ஹடா | புல்பரி | 6 | |

| வரிசை எண் | சிட்சின் பெயர் | மேற்கு வங்காள காவல் நிலையத்திற்குட்பட்டிருப்பன | வங்காள தேச காவல் நிலையத்திற்குட்பட்டிருப்பன | J.L எண் | ஏக்கர்களில் பரப்பிடம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 47. | (i)டக்சின் மசால்டங்கா | டின்ஹடா | புருன்காமரி | 6 | 571.38 |
| | (ii)டக்சின் மசால்டங்கா ( துண்டுப் பகுதி) | டின்ஹடா | புருன்காமரி | 6 | |
| | (iii)டக்சின் மசால்டங்கா ( துண்டுப் பகுதி) | டின்ஹடா | புருன்காமரி | 6 | |
| | (iv)டக்ஸின் மசால்டங்கா (துண்டுப் பகுதி) | டின்ஹடா | புருன்காமரி | 6 | |
| | (v)டக்ஸின் மசால்டங்கா (துண்டுப் பகுதி) | டின்ஹடா | புருன்காமரி | 6 | |
| | (vi)டக்ஸின் மசால்டங்கா (துண்டுப் பகுதி) | டின்ஹடா | புருன்காமரி | 6 | |

| வரிசை எண் | சிட்ஸின் பெயர் | மேற்கு வங்காள காவல் நிலையத்திற்குட்பட்டிருப்பன | வங்காள தேச காவல் நிலையத்திற்குட் பட்டிருப்பன | J.L எண் | ஏக்கர்களில் பரப்பிடம் |
|---|---|---|---|---|---|

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| 48. | (i)பாஸ்சிம் மசால்டங்கா | டின்ஹடா | புருன்காமரி | 4 | 29.49 |
| | (ii)பாஸ்சிம் மசால்டங்கா | டின்ஹடா | புருன்காமரி | 4 | |
| 49. | (i)புர்பாசிட் மசால்டங்கா | டின்ஹடா | புருன்காமரி | 10 | 35.01 |
| | (ii)புர்பாசிட் மசால்டங்கா (துண்டுப் பகுதி) | டின்ஹடா | புருன்காமரி | 10 | |
| 50. | (i)புர்பாசிட் மசால்டங்கா | டின்ஹடா | புருன்காமரி | 11 | 153.89 |
| | (ii)புர்பாசிட் மசால்டங்கா (துண்டுப் பகுதி) | டின்ஹடா | புருன்காமரி | 11 | |

| வரிசை எண் | சிட்ஸின் பெயர் | மேற்கு வங்காள காவல் நிலையத்திற்குட்பட்டிருப்பன | வங்காள தேச காவல் நிலையத்திற்குட்பட்டிருப்பன | J.L எண் | ஏக்கர்களில் பரப்பிடம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 51. | (i)உத்தர் டால்டங்கா | டுபான்காஞ் | புருன்காமரி | 14 | 24.98 |
| | (ii)உத்தர் டால்டங்கா (துண்டுப் பகுதி) | டுபான்காஞ் | புருன்காமரி | 14 | |
| | (iii)உத்தர் டால்டங்கா (துண்டுப் பகுதி) | டுபான்காஞ் | புருன்காமரி | 14 | |
| | மொத்தப் பரப்பிடம் | | | | 7,110.02 |

அயல் நிலப்பகுதிகள் குறித்து மேலே கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள், 1996, அக்டோபர் 9 முதல் 12 வரையிலும் கல்கத்தாவில் நடைபெற்ற இந்தோ – வங்காளதேச மாநாட்டின்போதும், அத்துடன்,1996, நவம்பர் 21 முதல் 24 வரையிலும் ஜல்பய்குரி ( மேற்கு வங்காளம்) – பன்சகர் ( வங்காள தேசம்) நிலப்பகுதியில் கூட்டுக்கள ஆய்வின்போதும் இந்தியாவும் வங்காளதேசமும் வைத்திருந்த பதிவணங்களுடன் கூட்டாக ஒப்பிட்டுப்பார்த்து சீர்செய்யப்பட்டுள்ளன.

**பிரிக் J.R. பீட்டர்**
இயக்குநர் நிலப்பதிவணங்கள் மற்றும் நிலஅளவை (பதவி வழி) மேற்கு வங்காளம், இந்தியா & இயக்குநர், கிழக்கு வட்டம் இந்திய நிலஅளவை கல்கத்தா.

**முகமது ஷபியுத்தின்**
தலைமை இயக்குநர், நிலப்பதிவணங்கள் மற்றும் நிலஅளவைகள், வங்காளதேசம்.